13.11.2025.

O.S.N0.284/2021 ,

D.W. 2– திரு. ஹாமீன்

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு எதிர்மனுதாரர்கள் தரப்பில் குறுக்கு விசாரணை

வழக்கு 2 தபசில் சொத்து 08.10.1971 அன்று 4, 5 பிரதிவாதிகள் பெயரில் எனது தகப்பனார் கிரையம் வாங்கினார் என்றால் இல்லை எனது தாயார் கிரையம் வாங்கினார். மேற்கண்ட தேதியில் 4, 5 பிரதிவாதிகள் மைனர் என்றால் சரிதான். சொத்து எனது தகப்பனார் பணத்தை கொண்டு வாங்கப்பட்டது என்றால் எனது தாயார் பணத்தை கொண்டு வாங்கப்பட்டது. எனது தாயாருக்கு சொத்து வாங்கும் அளவிற்கு வருமானம் கிடையாது என்றும், எனது தகப்பனாரின் பணத்தை கொண்டு வாங்கப்பட்டது என்றும் சொன்னால் சரியல்ல. மேற்கண்ட சொத்து குடும்ப சொத்தாக பாவிக்கப்பட்டு குடும்ப சொத்தாக அனுபவிக்கப்பட்டது என்றால் சரிதான். 1971ம் ஆண்டு காலக்கட்டத்தில் 2ம் தபசில் சொத்தில் எனது தகப்பனார் தான் விவசாயம் செய்தார் என்றால் சரிதான். 4, 5 பிரதிவாதிகள் மற்ற குடும்ப உறுப்பினர்களுக்காக நம்பகத்தன்மையில் இருந்தார்கள் என்றால் இல்லை. 4, 5 பிரதிவாதிகள் பெயரில் சொத்து வாங்கப்பட்டதற்கு காரணம் எனக்கு தெரியாது. 21.01.2008ல் 4, 5 பிரதிவாதிகள் 2ம் தபசில் சொத்தை பொறுத்து எனது தாயாரான 1ம் பிரதிவாதி பெயரில் ஒரு செட்டில்மெண்ட் எழுதி வைத்தார்கள் என்றால் சரிதான். அதே தேதியில் 4, 5 பிரதிவாதிகள் 2,3,6 பிரதிவாதிகளுடன் சேர்ந்து தாயாரிடம் இருந்து செட்டில் மெண்ட எழுதி வாங்கினார்கள் என்றால் சரிதான். அவ்வாறு திரும்பவும் செட்டில்மெண்ட் எழுதி வாங்கியது பெண் மக்களுக்கு நம்பிக்கை

திரோகம் இழைக்கும் வகையாக எழுதப்பட்டது என்றால் சரியல்ல. எனது தாயாரிடம் இருந்து எழுதி வாங்கப்பட்ட செட்டில் மெண்ட் ஆவணம் எனது தாயார் தெளிந்த சிந்தனையுடன் எழுதி கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. ஒரே நாளில் செட்டில் மெண்ட் எழுதி கொடுத்தும், அதே நாளில் செட்டில்மெண்ட் திரும்ப எழுதி வாங்கியதற்கு என்ன காரணம் என்றால் தாயாரை மறுபடியும் அழைக்க இயலாது என்பதற்காக ஒரே நாளில் எழுதி வாங்கப்பட்டது. மற்றொரு நாள் எனது தாயாரை சார்பதிவாளர் அலுவலகம் அழைத்து சென்றால் உண்மைதெரிந்து விடும் என்பதற்காக ஒரே நாளில் எழுதி வாங்கப்பட்டது என்றால் சரியல்ல. ஒரே நாளில் செட்டில் மெண்ட் எழுதிக்கொடுத்து, திரும்ப எழுதி வாங்குவது செட்டில்மெண்ட் ரத்து செய்வது போல் ஆகும் என்பதால் அது சட்டப்படி செல்லாது என்றால் சரியல்ல. மேற்கண்ட செட்டில்மெண்ட் படி சொத்தின் அனுபவம் ஒப்படைக்கப்படாததால் அந்த செட்டில்மெண்ட் செல்லாது என்றால் சரியல்ல. எனது தாயாரிடம் இருந்து திரும்ப எழுதி வாங்கிய செட்டில்மெண்ட் எனது தாயாருக்கு தெரியாது என்றும் அது தெரிந்தால் அவர் திரும்ப எழுதிக்கொடுக்கமாட்டார் என்றால் சரியல்ல. 1, 2 தபசில் சொத்துக்கள் எங்களது குடும்பத்திற்கு பொதுவாக பாத்தியப்பட்டு உபயவாதிகளின் கூட்டு அனுபவத்தில் இருந்து வருகிறது என்று சொன்னால் சரியல்ல. வாதிக்கும், மற்ற பெண் மக்களுக்கும் தபசில் சொத்துக்களில் பங்கு உண்டு என்றால் சரியல்ல. எதிர்வழக்குரையில் சொல்லப்பட்ட சங்கதிகள் என்னுடைய தாயாருக்கு தெரியாது என்றால் சரியல்ல. அவ்வாறு எனது தாயாருக்கு எதிர்வழக்குரை விவரங்கள் தெரியும் என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

பாகப்பிரிவினை பத்திரத்தில் சொல்லப்பட்டுள்ள 1வது தபசில் 9வது அயிட்ட சொத்து வாதியின் திருமணத்திற்காக விற்கப்பட்டதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. குலவணிகர்புரம் கிராமத்தில் உள்ள 52 செண்ட் நிலம், 32 செண்ட் விற்றது வாதிக்கு தெரியாது என்று சொன்னால் சரியல்ல. மேற்கண்ட நிலங்கள் விற்றதாக சொல்வது உண்மையல்ல என்றால் சரியல்ல. எங்கள் குடும்பத்தில் நடந்த திருமண நிகழ்ச்சி மற்றும் மற்ற நிகழ்ச்சிகளில் எனது தகப்பனார் கலந்துகொண்டதாக சொல்வது அவரை நாங்கள் வீல்சேரில் வைத்து தான் அழைத்து சென்றோம் என்றால் சரியல்ல. எனது தாயாருக்கு எனது தகப்பனாரைவிட 4 வயது குறைவு என்றால் சரிதான். அதுபோல பிறருடைய துண்டுதல் மற்றும் துர்போதனையின்பேரில் தான் வாதி இந்த வழக்கை தாக்கல் செய்ததாக சொல்வது உண்மையல்ல என்றால் சரியல்ல. ஆண்மக்களுக்கு மட்டும் செட்டில்மெண்ட் எழுதி தந்தற்கு ஆண்மக்களின் வறுமை தான் காரணம் என நாங்கள் சொல்வது தவறு என்றால் சரியல்ல. எங்களுக்கு விவசாயம் மட்டும் தான் வாழ்வதாரம் என்று பொய்யாக சொல்கிறோம் என்றால் சரியல்ல. எனது சகோதரர் 3ம் பிரதிவாதி மல்கானுக்கு குழந்தைகள் கிடையாது என்றால் சரிதான். என்னுடைய திருமணத்திலும், எனது சகோதரி அசன்பாத் திருமணத்திலும் நிக்ஹா புத்தகத்தில் எனது தகப்பனார் ஆங்கிலத்தில் கையெழுத்து செய்துள்ளார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. 2005ம் ஆண்டு எனது தகப்பனார் எழுதி கொடுத்தாக சொல்லப்படும் செட்டில்மெண்ட் ஆவணம் எழுதப்பட்ட காலத்தில் சார்பதிவாளர் அலுவலகம் மேலப்பாளையத்தில் மாடியில் இருந்தது என்றால் எனக்கு தெரியாது.

எனது தகப்பனாரை காரில் வைத்து தான் கைரேகை வாங்கினோம் என்றால் எனக்கு தெரியாது. என்னுடைய தகப்பனார் சுயநினைவு இல்லாததால் உழவன் கணேசன் தான் எனது தகப்பனாரின் கைரேகையை பிரட்டினார் என்றால் சரியல்ல. கணேசனை சாட்சியாக விசாரிப்பதில் எனக்கு ஆட்சேபனை இல்லை. சார்பதிவாளர் அலுவலகத்தில் சாட்சியாக கையெழுத்து செய்ததது யார் என்றால் ஒரு கையெழுத்து மாமா முகமது முகைதீன் போட்டுள்ளார். எனது சாட்சியம் ஏற்றுக்கொள்ளத்தக்கது அல்ல என்றும் வாதிகளின் வழக்கு பிராதுப்படி தீர்ப்பாக வேண்டும் என்றும் சொன்னால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

I Additional District Judge,

Tirunelveli.